<u>சார்பு நீதிமன்றம், திருவாரூர்.</u>

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**<u>அசல் வழக்கு எண்.125/2021</u>**

பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.4 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. B. மகாலெட்சுமி, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திரு. பாலமுருகன் | த/பெ: கல்யாணசுந்தரம் |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 01.04.2026 | தாலுக்கா: |

<u>முதல் விசாரணை...</u>

இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

ராஜீவ்காந்தி என்பவர் ராஜேந்திரன் மீது வீடு குடியிருப்பது சம்பந்தமாக வழக்கு போட்டுள்ளார். எனக்கு 47 வயதாகிறது. நான் 8 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் ஆசாரிவேலை பார்த்துவருகிறேன். நான் அத்திக்கடையில் ஆசாரி வேலை பார்த்துவருகிறேன். தாவா சொத்தின் சர்வே எண் 104/7 அதன் விஸ்தீரணம் தெரியாது. தாவா சொத்து ராஜீவ்காந்தி பெயரில் உள்ளது. ராஜீவ்காந்தி அவரின் தகப்பனாரிடமிருந்து சாசனம் எழுதி வாங்கியுள்ளார் எந்த வருடம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. ராஜீவ்காந்தி பெயரில் ஏற்பட்ட ஆவணத்தை நான் பார்க்கவில்லை. தாவா சொத்து யாருக்கு சொந்தமானது என்பதற்கான ஆவணம் நான் பார்க்கவில்லை என்றால் பார்த்ததில்லை. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. நான் எந்த ஆவணத்திலாவது கையெழுத்து போட்டுக்கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

என் முன்னிலையில் சமரசம் ஏதேனும் செய்யப்பட்டதா என்றால் இல்லை. எந்த வருடம் எந்த தேதியில் சமரசம் நடந்தது என்ற விவரத்தை முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆவணம் குறித்து முதல்விசாரணையில் சரியாக சொல்லாத நிலையில் அந்த ஆவணம் குறித்து நான் சாட்சியமளிக்க இயலாது என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு சொந்த ஊர் திருவிடைவாசல். திருவிடைவாசலில் எத்தனை கல்யாணசுந்தரம் உள்ளார்கள் என்றால் எனக்கு தெரிந்து இரண்டு நபர்கள் உள்ளார்கள். என் தகப்பனாரின் தகப்பனார் பெயர் முருகையா. ஒப்பந்தம் என் முன்னிலையில் ஏற்படாத நிலையில் அந்த ஆவணத்தில் உள்ள கையெழுத்து என் தகப்பனாருடையது என நான் சாட்சியமளிக்க முடியாது என்றால் சரியல்ல. ஒப்பந்தம் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியாது. ஆனால் அதிலுள்ள விவரம் என் தகப்பனாருடையதுதான். பிரதிவாதி எனக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.